DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW3

பட்டியல் சாட்சி LW6

| | | |
|---|---|---|
| Name | : | **முருகேசன்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 28.11.2023 |

**( A1, A2 are present )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் குருவிகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் காவல்துறையில் தலைமைக்காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, தற்போது ஜெயபாரத் மில்லில் காவலாளியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 05.04.2019 அன்று மாலை 3 மணிக்கு நான் மில்லில் பணியில் இருக்கும்பொழுது, முந்தைய தினம் சம்பவம் குறித்து ஆஜர் எதிரிகள் வாக்குமூலம் கொடுத்தாக போலிசார் என்னிடம் சொல்லி, என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். ஆஜர் எதிரிகள் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும் பொழுது நான் அந்த இடத்தில் இல்லை எனக்கு தெரியாது. எதிரிகளை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும் பொழுது நான்

இல்லை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ராஜா என்ற அந்தோணி ராஜ் மற்றும் வேல்முருகன் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2 மற்றும்** அத்தாட்சியில் உள்ள 1ம் சாட்சி கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 05.04.2019 ம்தேதி மதியம் 3 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த முருகேசன் என்பவர் ஜெயபாரத் மில்லில் காவலாளியாக பணியில் இருந்த போது, போலிஸ் பார்டியை கண்டு 2 எதிரிகள் ஓடியதாகவும், அவர்களை போலிசார் கைது செய்து விசாரித்த பொழுது, ராஜ் என்ற அந்தோணி ராஜ் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அதன் அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் பதிவு செய்யதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், அதன் பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலிசார் எங்களை அழைத்து சென்று மருந்து பாட்டிலை கைப்ற்றியதாகவும், அத்தாட்சியில் நானும் நானும் முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகள் கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் மறுக்கிறேன்.

**ம.வி இல்லை.**